**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**KILVELUR**
**CC.No.588/2023**
LW1PW1

| | | | |
|---|---|---|---|
| Name | அய்யபெருமாள் | Caste | |
| Father's/Husband Name | கிருஷ்ணன் | Calling | |
| Village | செம்பியன்மகாதேவி | Religion | |
| Taluk | | Age | 52 |

**Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of**

**05-03-2025**

**All accused present.**

**முதல் விசாரணை**

நான் தற்போது செம்பியன்மகாதேவியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். என் மகள் ஜெயவர்ஷினி மு.ரா.சன்ஸ் கடையில் கேஷியராக வேலை செய்து வருகிறார். ஆகையால் வேலையெல்லாம் முடித்து கடைசி பஸ்சில் தான் வீட்டிற்கு வருவாள். பஸ் ஸ்டாப்பிலிருந்து வீட்டிற்கு ஒரு கிலோமீட்டர் தூரம் இருக்கும் . அதனால் நான் தான் பஸ் ஸ்டாப்பிலிருந்து என் இரு சக்கர வாகனத்தில் என் மகளை வீட்டிற்கு அழைத்து வருவேன். ஏற்கெனவே ஆஜர் எதிரிகள் பஸ்சில் வரும் நபர்களிடம் தகாத வார்த்தைகளால் பேசியதை கேட்டதற்கு ஆஜர் எதிரிகளுக்-கும் என் மகளுக்கும் இடையே பிரச்சனை இருந்து வந்தது. இந்நிலையில் கடந்த 27.07.2023 அன்று நான் பஸ் ஸ்டாப்பில் என் மகளுக்காக காத்து கொண்டிருக்கும்பொழுது ஆஜர் எதிரிகள் என் மகளை பஸ்சிலிருந்து இறங்குவதற்கு விடவில்லை. வழி விடுங்கள் அவள் கூறியதற்கு உரசி விட்டு செல்லுங்கள் என்று ஆஜர் எதிரிகள் கூறினார்கள். நான் உடனே என் மகளை பஸ்சிலிருந்து இறக்கி விட்டேன். அப்போது ஆஜர் எதிரிகள் என் சட்டையை

பிடித்தார்கள். நான் உடனே அவர்களை தள்ளி விட்டேன். உடனே அருகில் இருந்த பெரிய பாறை கல்லை எடுத்து என் நெஞ்சின் மீது ஆஜர் எதிரிகள் எரிந்தார்கள். அதில் நான் கீழே விழுந்து விட்டேன். பின்பு என் மகள் மற்றும் மகன் என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் நாகப்பட்டினம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். நான் சுமார் 15 நாட்களாக சிகிச்சையில் இருந்தேன். பின்பு வலி தாங்கமுடியாமல் நான் திருச்சியில் தனியார் மருததுவமனையில் இருதய அறுவை சிகிச்சை பெற்று கொண்டேன். நான் மருத்துவமனையில் இருந்தபொழுது போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்ததை கூறினேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் இருக்கும் கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா. ஆ- 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறினார்.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**

**KILVELUR**

**CC. No. 588/2023**

LW 4PW2

| | | | |
|---|---|---|---|
| Name | சரவணன் | Caste | |
| Father's/Husband Name | தெட்சிணாமூர்த்தி | Calling | |
| Village | அகலங்கண் | Religion | |
| Taluk | | Age | 49 |

**Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of**

**05-03-2025**

**All accused present.**

**முதல் விசாரணை**

நான் தற்போது செம்பியன்மகாதேவியில் வசித்து மளிகை கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரிகள் அய்யம் பெருமாளிடம் சண்டை வளர்த்தார்கள். பின்பு மறுநாள் கீழ்வேளூர் போலீசார் வந்து சம்பவம் நடந்ததை பற்றியும் எங்கு நடந்தது பற்றியும் விசாரித்து கையொப்பம் பெற்று கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். போலீசார் என்னை விசாரித்தார்கள். அந்த கையொப்பம் மட்டும் அ.சா. ஆ- 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறினார்.